**லுனுகல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 ஜுன் 20 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஜுன் 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்டோபர் 23 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில குறிப்பிடப்பட்ட குறிப்பிடத்தக்க விடயங்களின் காரணமாக, 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான லுனகல பிரதேச சபையின் நிதிசார் நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றின் உண்மையானதும் நியாயபூர்வமானதுமான தோற்றத்தை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 தேறிய சொத்துக்களில் குறைவு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டவாறான மீளாய்வாண்டிற்கான தேறிய சொத்துக்களின் குறைவு ரூபா 9,404,387 ஆகும்.

#### 1.3.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்படவில்லை.

#### 1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச சபையின் நிலையான சொத்துக்களது பெறுமதி மற்றும் மூலதனச் செயற்பாட்டிற்கான வருவாய் பங்களிப்புக் கணக்கு மீதியானது ஒன்றுக்கொன்று சமமாக இருக்க வேண்டுமாயினும், ரூபா 4,471,635 வேறுபாடு நிலவியது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்கு நிதிசார் கூற்றுக்களில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்கூட்டியே பெறப்பட்டிருந்த தீர்வை, வரியாகிய ரூபா 14,659 மீளாய்வாண்டினது வருவாயாகக் கணக்கிலிடப்பட்டமையால், ஆண்டிற்கான பற்றாக்குறை மற்றும் 2013 டிசெம்பர் 31 க்கு முன்னர் பெறப்பட்ட வருவாய்க் கணக்கின் மீதி ஆகிய ஒவ்வொன்றும் ரூபா 14,659 ஆல் நிதிசார் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) முடிவுற்ற 4 வேலைகளது பெறுமதி ரூபா 7,943,446 ஆகும். எனினும், உடன்பட்டவாறான ரூபா 7,979,000க்கு கடன்பட்டோருக்கான நிதியேற்பாடாக மேற்கொள்ளப்பட்டமையாலும் மீளாய்வாண்டிற்கான கடன்கொடுத்தோருக்கு ரூபா 7,179,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமையாலும், மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை 728,892 குறைவாகவும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் கணக்கு மீதி ரூபா 35,554 அதிகரித்தும் கடன்கொடுத்தோர் கணக்கு மீதி ரூபா 764,446 குறைத்தும் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பண வருவாய் ரூபா 3,231,257 ஆகும். எனினும், அது ரூபா 3,610,520 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் மீளாய்வாண்டினது பற்றாக்குறை ரூபா 379,263 குறைவாகவும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வருவாய்க் கடன்பட்டோரின் பெறுமதி அதேயளவு அதிகரித்தலும் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 62,632 கடன்கொடுத்தோருக்கென நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டிய 6 சந்தர்ப்பங்களில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டினது பற்றாக்குறையும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் தொகையும் ஒவ்வொன்றும் ரூபா 62,632 ஆல் நிதிசார் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(எ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட ஐந்தொகையில் தேறிய சொத்துக்களது பெறுமதியானது ஒதுக்கம் மற்றும் கடன் மூலதனத்திற்குச் சமமாக இருக்க வேண்டுமாயினும், தேறிய சொத்துக்களது பெறுமதி ரூபா 8,536,133 ஆகவும் திரண்ட நிதியத்தினதும் ஒதுக்கத்தினதும் பெறுமதி ரூபா 9,008,793 ஆகவும் அமைந்தல் ரூபா 472,660 வேறுபாடு சுட்டிக்காட்டப்பட்டது.

(ஏ) உள்ளக கிராம முன்னோடிச் செயற்திட்டத்தினது நிறுவனங்களை பலப்படுத்த கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 603,000 பெறுமதியான மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் மூலதனமாக்கப்படாததால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதனப் பயன்பாட்டிற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கின் மீதி என்பன ரூபா 603,000 குறைவாகவும் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.4 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களில் உள்ள கணக்கு மீதிகளைத் தொடர்புடைய உப பதிவேடுகளுடன் ஒப்பிடுகையில் பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்கு | நிதிசார் கூற்றுக்கமைய மீதி | பதிவேட்டுக்கமைய மீதி | வித்தியாசம் | தொடர்புடைய உப பதிவேடு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| ஊழியர் கடன் | 521,000 | 782,998 | 261,998 | ஊழியர் கடன் பதிவேடு |
| பொதுக் களஞ்சியம் | 179,224 | 30,728 | 148,496 | களஞ்சியப் பட்டோலை |

### 1.3.5 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய கணக்கு மீதி ரூபா 23,716,411 ஆகும். கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதி ரூபா 23,635,684 ஆகும்.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றின்மை

தொடர்புடைய தகவல்களைக் கணக்காய்விற்குக் சமர்ப்பிக்காமையால் ரூபா 4,659,358 பெறுமதியுடைய 5 கணக்கீட்டு விடயங்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132 ஆம் பிரிவு | அமைச்சரின் முன் கூட்டிய அங்கீகாரமின்றி 4 சந்தர்ப்பங்களில் சபையின் நிதியிலிருந்து ரூபா 56,440 செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்வரி அதிகாரச் சட்டம் | 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 215 சந்தர்ப்பங்களில் அறவிடப்பட்ட வெளியிடுகை வரியான ரூபா 40,074 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படாது வைப்புக் கணக்கிலிருந்தது. |
| (இ) | இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | வைப்பிலிடப்பட்டு 2 ஆண்டுகளுக்குள் கோரிக்கை விடுக்கப்படாத ரூபா 91,161 வைப்பு வருவாயில் செலவு வைக்கப்படவில்லை. |
| (ஈ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான கடைகளது குத்தகை வாடகை 5 ஆண்டுகளுக்கொருமுறை அரசாங்க விலை மதிப்பீட்டாளராலோ அல்லது உள்ளூராட்சி நிறுவன விலை மதிப்பீட்டாளராலோ மதிப்பீடு செய்யப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 1,9244,972 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 586,344 ஆகும். ஆகவே நிதிசார் விளைவுகளில் ரூபா 1,338,628 அதிகரிப்பு ஏற்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுடன் கூடிய நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டவாறான மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு ரூபா 1,338,628 ஆகும். இதன் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

| மீண்டுவரும் வருவாய் | 2013 | 2012 | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| தீர்வையும் வரியும் | 1,146,607 | 1,189,068 | (42,461) |
| வாடகை | 2,699,351 | 2,352,273 | 347,078 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 799,637 | 547,520 | 252,117 |
| சேவைக் கட்டணம் | 285,011 | 181,964 | 103,047 |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 3,329,861 | 1,702,446 | 1,627,415 |
| ஏனைய வருவாய் | 157,823 | 92,227 | 65,596 |
| வருவாய்க்கான உதவி | 10,286,857 | 8,957,456 | 1,329,401 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 12,913,382 | 11,594,333 | (1,319,049) |
| பயணச் செலவினம் | 260,390 | 193,193 | (67,197) |
| வழங்கலும் உபகரணமும் | 1,505,336 | 1,329,443 | (175,893) |
| மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பராமரித்தலும் | 280,472 | 252,514 | (27,958) |
| போக்குவரத்தும் பயன்பாட்டுச் சேவைகளும் | 764,731 | 542,438 | (222,293) |

| | | | |
|---|---|---|---|
| நிவாரணத்தொகை உதவு தொகை, உதவிப் பணம் | 346,960 | 319,092 | (27,868) |
| ஒய்வூதியம், ஓய்வூதிய நலன், பணிக்கொடை | 708,904 | 205,597 | (503,307) |
| | | | ---------------------- |
| மீண்டுவரும் வருவாயில் அதிகரிப்பு | | | (1,338,628) |
| | | | ========== |

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 வருவாய்ச் சேகரிப்புச் செயலாற்றல்**

2013 ஜனவரி 01 இல் உள்ளவாறான ஏக்கர் வரி நிலுவையில் எதுவுமே 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாதிருந்தது. நிலுவையாக உள்ள தீர்வையினது அறவீடு 10 சதவீதம் ஆகும். வருவாய் அறவீட்டு முன்னேற்றம் திருப்தியளிப்பதாக இல்லை என அவதானிக்கப்பட்டது.

**2.3.2 தீர்வையும் வரியும்**

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தீர்வை மீளாய்வு செய்யப்பட்டு அதற்கேற்ப தீர்வையும் வரியும் அறவிடப்பட வேண்டுமாயினும் 2013 ஆம் ஆண்டிற்கான தீர்வையும் வரியும் 2005 ஆம் ஆண்டு மதிப்பீட்டு அடிப்படையிலேயே அறவிடப்பட்டவாறிருந்தன.

**2.3.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மாகாண சபைத் தலைமைச் செயலாளாரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும் ரூபா 1,990,142 ஆகும். விபரம் வருமாறு

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 1,751,155 |
| முத்திரைக் கட்டணம் | 238,987 |

**2.3.4 காணி வரி**

பட்டிப்பொல கிராம சபைக் கட்டிடத்தில் 2 ஏக்கர், 3 றூட், 34 பேர்ச் காணியில் மாகாண ஆயுர் வேதத் திணைக்களம் ஆயுர்வேத மருந்தகம் ஒன்றை நடாத்தி வந்தது. பிபிள வீதியில் உள்ள இக் காணி சபைக்குச் சொந்தமானதாகும். எவ்வாறாயினும், சபை இதற்கென கட்டணம் அறவிடாதிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பயன்படுத்தப்படாதுள்ள சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான 78 – 9579 இலக்க கை டிறக்டர் 3 ஆண்டுகளுக்கு மேலாக சபை வளாகத்தில் பயன்படுத்தப்படாதிருந்தது.

**3.2 திண்மக் கழிவு முகாமைத்துவம்**

சபைக்குரிய பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் முறையற்றவாறு சபைப் பிரதேசத்தில் அகற்றப்பட்டவாறிருந்தன. திண்மக் கழிவு முகாமைத்துவ முறைமை ஒன்று அமுலாகாதிருந்தது. குமுக்கன் ஓயா ஆற்று நீரில் கழிவுகள் கலப்பதால் பாதக விளைவுகள் ஏற்படலாம் என அவதானிக்கப்பட்டது.

4. **கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**வரவு, செலவுத் திட்டக்கட்டுப்பாடு**

2013 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய் மற்றும் செலவினங்களுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| **மீண்டுவரும் வருவாய்** | **வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது** | **உள்ளவாறானது** | **வேறுபாடு** | **வேறுபாட்டின் சதவீதம்** |
|---|---|---|---|---|
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 912,000 | 799,637 | 112,363 | 12.3 |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 1,714,000 | 3,329,861 | 1,615,861 | 94.2 |
| ஏனைய வருவாய் | 244,000 | 157,823 | 86,177 | 35.3 |
| வருவாய்க்கான உதவி | 11,968,201 | 10,286,857 | 1,681,344 | 14.0 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| பயணச் செலவினம் | 314,000 | 260,390 | 53,610 | 17.0 |
| வழங்கலும் உபகரணமும் | 1,272,000 | 1,505,336 | 233,336 | 18.3 |
| மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பராமரித்தலும் | 440,000 | 280,472 | 159,528 | 36.2 |
| உதவிப் பணம், உதவு தொகை, நிவாரணப் பணம் | 516,000 | 346,960 | 169,040 | 32.7 |
| ஓய்வூதியம், ஓய்வூதியநலன், பணிக்கொடை | 227,789 | 708,904 | 481,115 | 211.2 |

5. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு